**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 101** **நாள் : 15.04.2020**

**அத்தியாவசிய சேவைகள் சார்ந்த நிறுவனங்களின் வாகனங்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி அட்டை 03.05.2020 வரை காலநீட்டிப்பு செய்யபட்டுள்ளதாக ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், .இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக மாநிலம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி அத்தியாவசிய தேவைகளுக்கான தொழிற்சாலைகள், மருந்தகங்கள், காய்கனி மற்றும் மளிகை கடைகளைத் தவிர்த்து பிற நிறுவனங்கள் அனைத்தும் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறையின் 23.03.2020 நாளிட்ட அரசாணை எண்.152ல் குறிப்பிட்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சியால் அத்தியாவசிய சேவைகள் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு தடையுத்தரவு காலத்தில் செயல்படுவதற்கு 15.04.2020 வரை ஏற்கனவே அனுமதி அட்டை வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது தடை உத்தரவு 03.05.2020 வரை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையினை 03.05.2020 வரை பயன்படுத்தி கொள்ளலாம் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், .இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**